We Undertake
TYPEWRITER
REPAIRS
FUDO
ENTERPRISES
39/17, Power House Rd.,
3rd Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

TYPEWRITERS
FOR SALE
Tamil: REMINGTON 18"
New Key Board
OLYMPIA 15"(Standard)
English: OPTIMA
Standard 18"
Portables: Silver-Reed,
Olympia, Citizen, Adler.
FUDO Enterprises
Jaffna Road, Manipay.
(Near Bank of Ceylon-Bitsman)

கடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு தை மீ 23 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 6 (05-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 60

# தமிழ் ஈழ ராணுவம் மீது தடை விதிப்பு

## புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இயங்க அனுமதி

– அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் –

யாழ்ப்பாணம் பெப்ரவரி, 5

சுமார் இரண்டு வருடங்களாக தமிழ்ப் பகுதிகளில் இயங்கி வந்த தமிழ் ஈழ ராணுவம் விடுதலைப் புலிகளினால் தடை செய்யப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் ஒருவரும் தமிழ் ஈழ ராணுவத்தின் முக்கிய பிரமுகர் ஒருவரும் சந்தித்து உரையாடியதைத் தொடர்ந்து தடை செய்யும் முடிவு எடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளினால் இவ் இயக்கம் தடை செய்யப்பட்டதையடுத்து சகல ஆயுதங்களும் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இயங்கிய தமிழ் ஈழ ராணுவத்தின் உறுப்பினர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதே போல் திருமலை மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாயிருந்து வடக்கில் இயங்கியவர்களையும் புலிகள் தம்முடன் இணைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் ஈழ ராணுவத்தின் உறுப்பினர்களை இணைப்பது பற்றி விடுதலைப் புலிகள் இன்னமும் முடிவு செய்யவில்லை.

தமிழ் ஈழ ராணுவம் தடை செய்யப்பட்டதை அடுத்து மேற்படி இயக்கம் சகல கடைகளிலும் தினசரி பெற்று வந்த வரி வசூலிப்பும் நிறுத்தப்பட்டுள்ளது.

அந்த இயக்கம் அறிவித்த நான்காவது அதிஷ்ட லாபச் சீட்டு இழுக்கப்படும் வரை விடுதலைப் புலிகள் அதனைப் பொறுப்பெடுத்துள்ளனர்.

தொடர்ந்து அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பை நடத்துவதா இல்லையா? என்பது குறித்துப் பின்னர் தீர்மானிக்கப்படும்.

தமிழ் ஈழ ராணுவத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## டிக்ஸிற் கொழும்பு திரும்புகிறார்

கொழும்பு, பெப்.5

இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் இன்று வியாழன் கொழும்பு திரும்புவார் என்று இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய அரசு அழைத்ததைத்தொடர்ந்து திரு. டிக்ஸிற் புதுடில்லி சென்று இலங்கைநிலைமை குறித்து இந்திய அரசு அதிகாரிகள் அமைச்சர்களுக்கு விளக்கியிருந்தார். (இ-எ)

## ஆஸ்பத்திரி ஷெல்
## அரச அதிபர் சென்று பார்த்தார்

யாழ்ப்பாணம் பெப். 5

செவ்வாய்க்கிழமை இரவு கோட்டையில் இருந்தேவப்பட்ட ஷெல்குண்டுகள் காரணமாக சேதமடைந்த ஆஸ்பத்திரியின் கட்டடங்களை யாழ் - அரச அதிபர் நேற்று சென்று பார்வையிட்டார்.

கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் அங்குள்ள மாமரம் ஒன்றில் தட்டுப்படாவிடில்வார்ட்டின்மேல் விழுந்து பாரிய உயிரிழப்புகளை ஏற்படுத்தி இருக்கும் என்று வைத்தியசாலை வட்டார

(4ஆம் பக்கம் பார்க்க)



யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்கனவே மயங்கிய நிலையில் இருந்த நோயாளி யோசப் வில்சன் (வயது 41) செவ்வாய் நள்ளிரவு ஷெல் தாக்குதலினால் கையில் படுகாயமடைந்தார். நேற்று ஆஸ்பத்திரியில் வைத்து எடுக்கப்பட்ட படம். (இ)

## ★ஆனையிறவு முகாமில் குளிர்பானம்

யாழ்ப்பாணம்,பெப்.5

ஆனையிறவு முகாம் பாதையூடாக போக்குவரத்து நடத்திய பிரயாணிகளுக்கு நேற்று முகாமில் குளிர்பானம் வழங்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசின் சுதந்திர தின விழாவை முன்னிட்டு இராணுவ உயரதிகாரிகள் வீதிக்கு வந்து ஒவ்வொரு பயணிக்கும் குளிர் பானம் வழங்கி தாமும் குடித்து மகிழ்ந்தனராம்.

போக்குவரத்து நடத்திய லொறிகள், பஸ்களின் சோதனைகளும் நேற்று தளர்த்தப்பட்டிருந்தன. (இ-10)



செவ்வாய்க்கிழமை நள்ளிரா நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த யாழ் ஆஸ்பத்திரி மகப்பேற்று சிகிச்சைப் பிரிவு நிலையத்தை யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் நேற்று பார்வையிட்ட போது எடுக்கப்பட்ட படம்.

# அம்பாறைத் தாக்குதல்களில் சிங்களவர் பலி!

கொழும்பு, பெப் 5

அம்பாறை மாவட்டத்தில் இரண்டு இடங்களில் நடைபெற்ற தாக்குதல்களில் ஊர்காவல் படையினர் உட்பட 12க்கு அதிகமான சிங்களவர்கள் உயிரிழந்தனர்.

ஒரு சிங்களக் கிராமத்தினுள் நேற்று அதிகாலை 3 மணியளவில் பிரவேசித்த ஆயுதபாணிகளான சுமார் 50 பேர், 30 சிங்களவரை வீடு ஒன்றினுள் வைத்துப் பூட்டிவிட்டு வெளியில் குண்டு வைத்து வெடிக்கச் செய்தார்களாம்.

வீட்டுபன்னல் ஊடாக சிலர் தப்பி ஓடவே அவர்கள் மீது துப்பாக்கிப் பிர

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஈழ ராணுவ தடைக்கு
# கிட்டு கூறும் காரணம்

யாழ்ப்பாணம்,பெப்5

தமிழ் ஈழ ராணுவத்திற்கு விடுதலையை முன்னெடுத்துச் செல்லக் கூடிய அரசியல்ரீதியான, அல்லது ஆயுதரீதியான சக்திகள் எதுவும் இல்லாததன் காரணத்தினாலேயே அதனைத் தடை செய்தோம்.

இப்படி விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு. கிட்டு தெரிவித்தார்.

தமிழ் ஈழ ராணுவத்தை தடை செய்ததற்கான காரணம் பற்றி எமது செய்தியாளர் கேட்ட பொழுது அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது.

தமிழ் ஈழ ராணுவத்தினருக்கு எதிர்கால செயல் திட்டம் எதுவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நடை பவனி நேற்று இல்லை

யாழ்ப்பாணம்,பெப் 5

வடபகுதியை நோக்கி வந்த சிப்பாய்கள் சுதந்திர தினமான நேற்று தமது நடைபவனியைத் தொடரவில்லை.

நேற்று முன்தினம் மாங்குளம் வரை வந்த சிப்பாய்களும் வாகனங்களும் தொடர்ந்தும் மாங்குளம் இராணுவ முகாமிலே நிற்பதாகக் கூறப்படுகிறது. (இ-10)

## திருமலையில் கான்ஸ்டபிள் பலி!

கொழும்பு,பெப்.5

திருகோணமலைமாவட்டத்தில் சாம்பல் குளம் என்னும் இடத்தில் போராளிகளுடன் நடந்த மோதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் யு. எல். எச். சோமரத்தின என்பவர் உயிரிழந்தார்.

இப்படி வெகுஜன தொடர்பு நிலையம் அறிவித்தது. (இ-எ)




ஸ்ரீ லங்கா அரசின்சுதந்திர தினத்தை எதிர்த்து துக்க தினம் அனுஷ்டித்த அன்னையர் முன்னணியினர் நேற்று யாழ்நகரில் நடத்திய ஊர்வலத்தையே படங்களில் காண்கிறீர்கள்.

## கொக்கட்டிச்சோலைப் படுகொலை:
# அமெரிக்க ஆலோசகர் நாடு கடத்தப் படுவார்

கொழும்பு, பெப் 5

கொக்கட்டிச்சோலை இறால் வளர்ப்புப் பண்ணையின் அமெரிக்க ஆலோசகரான திரு. புருஸ்சிர் நாடு கடத்தப்பட இருக்கிறார்.

இப்படி பி. பி. சி. வானொலி நேற்று இரவு அறிவித்தது.

திரு. புருஸ்சிர் நேற்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டார்.

விசாரணை முடிவில் அவர் நாடு கடத்தப் படுவார் என்று அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அதிகாரிகள் இதனை அவரிடமே தெரிவித்தனர்.

சட்ட நடவடிக்கை எதுவும் அவர் மீது எடுக்கப்பட மாட்டாது என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை இறால் வளர்ப்புப் பண்ணையில் வேலை செய்து வந்த 28 தமிழ் ஊழியர்கள் பொலீஸ் கொமாண்டோக்களினால் கொல்லப்பட்டனர் என்று இந்த அமெரிக்க ஆலோசகர் தகவல் வழங்கினார். அதைத் தொடர்ந்தே இவ்விசாரணை நடத்தப்பட்டது.

முதலில் இவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க அரசு தீர்மானித்தது.

அமெரிக்கத் தூதரகத்தின் தலையீட்டைத் தொடர்ந்து அரசு அந்த நடவடிக்கையைக் கைவிட்டது. இப்படி பி. பி. சி. வானொலி மேலும் தெரிவித்தது. (இ-எ)

### ஜபநேரம்

05-02-1987

வியாழக்கிழமை

ஜபநேரம்:
8. 05 முதல் 9 .35 வரை
ராகுகாலம்:
2.05 முதல் 3.35 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ரதஸப்தமி

## அன்னையர் முன்னணி நடத்திய ஊர்வலம்!

யாழ்ப்பாணம், பெப்.5

ஸ்ரீலங்கா அரசின் சுதந்திர தினத்தை ஈழம் வாழ் மக்கள் துக்க தினமாக அனுஷ்டிக்க கோரி நேற்று யாழ்நகர்ப் பகுதியில் அன்னையர்முன்னணி ஊர்வலம் ஒன்றை நடத்தியது.

நேற்றுக்காலை 9. 30 மணி அளவில் நல்லூர் கந்தசாமி கோயில் பின் வீதியில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் பருத்தித்துறை வீதி, அரசடி வீதி, பலாலிவீதி, கிராண்ட் வீதி, கொன்வென்ட் வீதி, பிரதானவீதி ஆகியவற்றினூடாகச் சென்று யாழ் செயலகத்தை அடைந்தது.

நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

அன்னையர் முன்னணி என எழுதப்பட்ட சுலோகத் துணியின்மேல் கறுப்புப் பட்டியும் கட்டப்பட்டிருந்தது.

ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களும் கறுப்புப் பட்டி அணிந்து காணப்பட்டனர்.

நண்பகல் 11 மணி அளவில் செயலகத்தை ஊர்வலம் அடைந்ததும் செயலகத்துக்கு முன்னால் உள்ள கண்டி வீதியில் அனைவரும் அமர்ந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## தேசியக் கொடி "அவுட்"

யாழ்ப்பாணம் பெப். 5

யாழ், குடா நாட்டுப் பகுதிகளில் உள்ள அரச அலுவலகங்களில் ஸ்ரீலங்கா அரசின் தேசியக் கொடி எதுவும் நேற்று ஏற்றப்படவில்லை.

இராணுவ முகாம்களுக்குள் மட்டும் தேசியக் கொடி ஏற்றப்பட்டு அணிவகுப்பு மரியாதைகள் நடத்தப்பட்டன என்று தெரியவருகிறது.

குடா நாட்டுப் பகுதிகளில்உள்ளஅரச அலுவலகங்களின் முன் தேசியக் கொடி ஏற்றப்படாதது இதுவே முதற் தடவை ஆகும்.

யாழ். அரச செயலகத்தில் கூட நேற்று தேசியக் கொடி ஏற்றப்படவில்லை. (இ-10)

### மிச்சந்திறேனி



பிரச்சினைக்குரிய அமெரிக்கப் பிரஜையை இஞ்சை விட்டுவைச்சால் அவர் மேலும் பல விஷயங்களை புட்டுக் காட்டி விடுவார் என்ட பயம் போலை…!

## நள்ளிரவு ஷெல்களால் மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ் நகரைக் கலக்கிய செவ்வாய்க்கிழமை நள்ளிரவு ஷெல் தாக்குதல்களால் பெருமளவு மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணி அளவில் யாழ் கோட்டை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் யாழ் ஆஸ்பத்திரி, நவீன சந்தை, இரண்டாம் குறுக்குத் தெரு, வின்சர் சந்தி, பி. எ. தம்பி லேன், வயிரவர் கோவிலடி ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இதன்காரணமாக ஆஸ்பத்திரி நோயாளி உட்பட இருவர் காயமடைந்ததுடன் பல வீடுகளும், கடைகளும் சேதமடைந்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

**சோதிடம்**

வாடிக்கையாளர்களுக்கு மீண்டும் தாமதமின்றிச் சேவையாற்ற எண்ணியுள்ளேன் Consultation by appointment ச. கணேசையர் (சோதிடர்), 143/3, கே கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**வகுப்புகள்**

G.A.Q., G.S.Q. வகுப்புகள் பல்கலைக்கழக பிரபல விரிவுரையாளர்களால் ஆங்கிலத்தோடு சித்தன்கேணிப் பிள்ளையார் மேற்கு வீதியில் கலாநிலையத்தால் சனி, ஞாயிறன்று நடைபெறுகின்றன. A/L மூன்று பாடச் சித்தி, ஆசிரியர் பயிற்சி, தொழில் தகைமையோடு பல்கலைக்கழக பட்டப் பரீட்சைக்கு உடனடியாகப் பதிவு செய்து படிக்க நேரில் தொடர்புகொள்க.

# தமிழ் ஆசிரியர்கள் மீது பாகுபாடு

## சங்க பொதுச் செயலாளர் அமைச்சுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 5

தமிழ் ஆசிரியர்கள் மீது பாகுபாடு காட்டுவதாக கல்வித் திணைக்களத்தின் மீது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் குற்றம் சாட்டியிருக்கிறார்.

அமைச்சுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் பொதுச் செயலாளர் இக்குற்றச்சாட்டைச் சமர்ப்பித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல தமிழ் ஆசிரியர்களுக்கு 1-1-85 முதல் வழங்கவேண்டிய சம்பள உயர்வு இன்னும் வழங்கப்படவில்லை.

1 1-86 முதல் ஏனைய அரச ஊழியர் பெறும் சம்பள உயர்ச்சி 95 சதவீதத்துக்கு மேலான தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை.

கல்வித் திணைக்களத்தில் இருந்து கட்டளை அனுப்பப்பட்ட சங்கீத நடன ஆசிரியர்களுக்குக் கூட இதுவரை உயர்ந்த சம்பளம் வழங்கப்படவில்லை

இப்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் ஆசிரியருக்குக் காட்டப்படும் பாகுபாடுகள் பற்றிய பூரண அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஈடுபட்டு உள்ளது.

இதற்கிடையில் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த இரண்டு கோரிக்கைகள் குறித்து கல்வி அமைச்சு சாதகமாக பரிசீலனை செய்வதாக அறிவித்து உள்ளது.

சங்கப் பொதுச் செயலாளர் திரு த மகாசிவம் அமைச்சச் செயலாளர் திரு. விஜேமானேயை அண்மையில் சந்தித்துப் பேசுகையில் இரண்டு கோரிக்கைகளைச் சமர்ப்பித்தார்.

அவையாவன:

1. எதிர்வரும் மே மாதம் வருடாந்த இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுக்கு ஏனைய அரச ஊழியர்கள்போல் போக்குவரத்துப் படிகள் வழங்குதல்

2. ஆங்கில ஆசிரியர்களுக்கு தபால் மூலம் பயிற்சி அளிப்பதற்காக வார இறுதி விடுமுறை வகுப்புகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவது (இ-எ)

# யாழ் மாவட்டத்தில் 2 எழுச்சிக் கிராமங்கள்

## ஒவ்வொன்றிலும் 50 வீடுகள்

யாழ்ப்பாணம், பெப். 5

1987 ஆம் ஆண்டு சர்வதேச வீடமைப்பு ஆண்டாக கொண்டாடப்படுவதால், யாழ் மாவட்டத்தில் இரு எழுச்சிக் கிராமங்களை உருவாக்க தேசிய வீடமைப்பு அதிகார சபை அனுமதி அளித்துள்ளது.

ஒவ்வொரு எழுச்சிக் கிராமத்திலும் 50 வீடுகள் கட்டப்படும் என யாழ் மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை உதவி முகாமையாளர் திரு. வே. பொன்னம்பலம் தெரிவித்தார்.

வீடுகளுடன் பொதுக் கிணறுகள், வீதியமைப்பு, சனசமூக நிலையம், மைதானம் போன்ற பொது வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இரு கிராமங்களைத் தெரிவு செய்யும் முகமாக சகல உதவி அரசாங்க அதிபர்களும் தமது கோரிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான குழு இவர்களின் கோரிக்கைகளில் இருந்து இரு கிராமங்களை தெரிவு செய்யும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

### மண்ணெண்ணெய் பங்கீட்டு அடிப்படையில்

அச்சுவேலி, பெப். 5

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கையிருப்பில் இருக்கும் மண்ணெண்ணெயை பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் கிளைகளூடாக விநியோகித்து வருகிறது.

குடும்ப உணவு பங்கீட்டு கார்ட்டில் பதிவு செய்து குறிப்பிட்ட அளவு ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு வருகின்றது. (இ-11)

### நாற்று மேடையை பார்வையிட்டனர்

வட்டுக்கோட்டை, பெப் 5

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி உயர் முகாமைத்துவ மாணவர் ஒன்றியத்தினர் யாழ் மில்க்வைற் தொழிலகத்திற்குச் சென்று சவர்க்காரம் செய்யும் முறைகளையும் நாற்றுமேடைகளையும் பார்வையிட்டனர்.

அதிபர் உட்பட சுமார் 30 மாணவர்கள் யாழ். மில்க்வைற் தொழிலக உரிமையாளர் சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசாவை தொழிலக மணிமண்டபத்தில் (வள்ளுவர் கோட்டத்தில்) சந்தித்து முகாமைத்துவத்தைப்பற்றியும் கலந்துரையாடினர். (இ-161)

**விளையாட்டரங்கு**

## வட்டு. விளையாட்டு கழகம் வெற்றி

வட்டுக்கோட்டை, பெப். 5

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்திற்கும் சித்தன்கேணி கலைநகர் நேருஜி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம் 3-2 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டியது

இப்போட்டி வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன்கோவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது (இ-161)

## எல்லே போட்டி முடிவு

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் உடுவில் உ. அ. அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களிற்கிடையிலான போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

எல்லே இறுதி ஆட்டத்தில் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் 6: 3 ஒட்ட வித்தியாசத்தில் புன்னாலைக்கட்டுவன் பறக்கும் கழுகு விளையாட்டு கழகத்தை வென்றது

ஸ்கந்த வரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு துரைசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார் (இ)

### இலங்கை மின்சார சபையின்

# யாழ் அலுவலக தொலைபேசி பழுது

## அத்தியாவசிய தொடர்புகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப் 5

இலங்கை மின்சார சபையின் யாழ் அலுவலகத்தின் தொலைபேசி பழுதடைந்து விட்டது. பழுதடைந்துள்ள தொலைபேசியின் இலக்கம் 24014 இந்த அலுவலகத்தின் கீழ்தான் யாழ்ப்பாணம் கோண்டாவில், ஆனைக்கோட்டைப் பகுதிகள் வருகின்றன.

மின்தடைகள் ஏற்படின், ஆஸ்பத்திரி மற்றும் அத்தியாவசிய திணைக்களங்கள் தொடர்பு கொள்ள முடியாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மானிப்பாய்ப் பகுதியில் நடந்த பொம்மர் தாக்குதலின் போது ஆனைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

**மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்**

# ஆழமான கருத்துடன் சுருக்கமாக பேசுங்கள்

## முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளர் அறிவுரை

முள்ளியவளை, பெப். 5

பாடசாலை விழாக்களில் பங்கு பற்றும் முதன்மை விருந்தினர்கள் மாணவருக்குச் சலிப்புத்தட்டாத விதத்தில் ஆழமான கருத்துக்களுடன் சுருக்கமாக பேச வேண்டும்.

முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பதவி ஏற்றபின்னர் திரு சுந்தரலிங்கம் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவுக் கல்வித்திணைக்களத்தில் கல்வி அதிகாரிகள் கோத்தணி அதிபர்கள் கூட்டம் ஒன்றில் பேசினர்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மாணவர்கள் புத்தகப் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தக் கூடாது.

வெளி வேலைகளாகிய விளையாட்டு, கலாசாரம், தமிழ்த்தினப் போட்டிகளிலும் பங்குபற்றக்கூடிய விதத்தில் பாடசாலைமட்டத்தில் சிறிய அளவிலாவது போட்டிகளை நடத்த கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்—

இப்படி கல்விப் பணிப்பாளர் திரு சுந்தரலிங்கம் மேலும் சொன்னார். (இ-எ-93)

# அளம்பில், செம்மலை மீனவ அகதிகளுக்கு இலவச மீன்பிடிவலை

யாழ்ப்பாணம், பெப். 5

அளம்பில், செம்மலைப் பகுதிகளில் அகதிகளாக உள்ள மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் நேற்று முன்தினம் பத்து மீனவர்களுக்கு வலைகளை வழங்கினர்.

இத்திட்டத்தின் கீழ் சுமார் 400 மீனவர்கள் வரையில் பயன் அடைவர் என்று தெரியவருகிறது.

வன்செயல்களுக்கு பாதிக்கப்பட்டு அகதிகளான செம்மலை, அளம்பில் மீனவர்களுக்கு வலைகள் வழங்கப்படுகின்றன. (இ-எ)

# முல்லைத்தீவில் 6,000 ஹெக்டர் நெற்செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 5

போதிய மழை இல்லாத காரணத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 6,000 ஹெக்டர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு கச்சேரியில் நடந்த மாநாடு ஒன்றில் வெளியிடப்பட்டது

அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்

வரட்சி காரணமாக நெற்செய்கை பாதிக்கப்பட்டதினால் நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது (இ-எ)

# தேவார, திருவாசக மனனப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 5

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருக்கும் திருமுறை முற்றோதல் நிறைவு விழாவை ஒட்டி தேவார, திருவாசக மனனப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சித்திரைமாதம் நடைபெற இருக்கும் இப் போட்டிகளில் 14-4-67 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்களே பங்குபற்ற முடியும்.

போட்டி 1

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பத்துத்திருப்பதிகங்கள். திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் எட்டுத் திருப்பதிகங்கள், சுந்தரமூர்த்தி நாயனார் ஏழு திருப்பதிகங்கள்.

இவை யாவும் அகத்தியர் தேவாரத்திரட்டு என்னும் நூலில் உள்ளன.

போட்டி 2

மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகம் - சிவபுராணம். கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம்.

இவை இரண்டும் தனித்தனிப் போட்டிகள் ஒருவர் விரும்பினால் இரண்டு போட்டிகளிலும் பங்குபற்றலாம்.

குறித்த பகுதிகளை மனனம் செய்து பிழையற ஒப்பிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனி வெண் பொற்பதக்கம் பரிசிலாக வழங்கப்படும்.

இப்போட்டியில் ஏற்கனவே பரிசு பெற்றவர் மீண்டும் பங்குபற்ற முடியாது.

குறித்த தேவாரப்பகுதியுள் எவையாவது பத்துத் திருப்பதிகங்களை அல்லது திருச்சதகம் முழுவதையும் மனனம் செய்து ஒப்புவிப்போருக்கு புத்தகப் பரிசுகள் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர், முழுப்பெயர், வீட்டு முகவரி, பிறந்த திகதி. பாடசாலை, பங்குபற்ற விரும்பும் போட்டி ஆகிய விவரங்களுடன் விண்ணப்பத்தை 31.3.1987 க்கு முன்னர் நல்லை ஆதீன [illegible] அனுப்பி வைக்கவேண்டும்.

இப்படி நல்லை ஆதீனம் அறிவித்துள்ளது (இ-எ)

# சங்கானையில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 5

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் எதிர் வரும் திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறும்.

அதிபர் திரு கா. சந்திரபாலன் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக திரு ஈ. சரவணபவன் தம்பதிகள் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக வட்டுக்கோட்டை கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா, திரு. எஸ். கே திருச்சிற்றம்பலம் தம்பதிகள், டாக்டர் செ. நாகநாதர் ஆகியோர் கலந்து கொள்வர்

டாக்டர் நாகநாதர் மங்கள விளக்கேற்றுவார்

அதிபர் காரியாலயத்தை கல்வி அதிகாரி திரு சண்முகராசாவும்—

புதிய கட்டடத்தை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு த. ஜீவரத்தினமும்—

நூலகத்தை திரு எஸ். கே. திருச்சிற்றம்பலமும் திறந்து வைப்பர்.

பரிசுகளை திருமதி யசோதை சரவணபவன் வழங்குவார்

மகாவித்தியாலய அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு த. கனகரத்தினம், சபை உறுப்பினர் திரு. சண்முகரத்தினம், செயலாளர் திரு. பொ. சாம்பசிவம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

சிரேஷ்ட மாணவ தலைவி செல்வி நே. ஜெயலலிதா வரவேற்புரை கூற, சிரேஷ்ட மாணவ தலைவன் செல்வன் க. குகதாஸ் நன்றியுரை நிகழ்த்துவார். (உ-எ)

# பாடசாலையின் தரம் உயர ஆசிரியரே காரணம்

## சேவைநலம் பாராட்டில் உரை

மானிப்பாய், பெப். 5

எமது பாடசாலை இவ்வாண்டு முதல் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைத் தரத்தை அடைவதற்கு இப்பாடசாலை ஆசிரியர்களே காரணம். கடந்த 25 ஆண்டுகளுக்குப் பின்னர் இப் பாடசாலையின் கல்வித் தரத்தில் திடீர் மாற்றம் ஏற்படுவதற்கு அதிபர் மட்டும் காரணமாக இருக்க முடியாது.

நவாலி அட்டகிரி சைவத்தமிழ் பாடசாலையில் பல ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வு பெற்ற திருமதி சிவபாக்கியம் ஐயாத்துரையின் சேவையை பாராட்டி பேசிய அதிபர் திரு. இ. வல்லிபுரம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இ. வல்லிபுரம் மேலும் கூறியதாவது:-

ஆக்கத் தொழிற்பாடுடைய ஆசிரியர்களால் தான் மாணவர்களை ஊக்கமுடன் கல்வி பயில வைக்க முடியும். உயிர்களுக்குச் செய்யும் தொண்டாகவே தம் பணியை இந்த ஆசிரியர் கருதி சேவையாற்றியுள்ளார்.

இவரைப் போன்ற ஆசிரியர்கள் ஓய்வு பெறுவது கல்வி உலகின் பேரிழப்பாகும்.

இப்படி அவர் கூறினார்.

பாடசாலை ஆசிரியை திருமதி கே. அரியம் ஆசிரியையின் சேவையை பாராட்டி அன்பளிப்பும் வழங்கினார்.

திருமதி சிவபாக்கியம் [illegible] பாராட்டு [illegible] களுக்கு நன்றி தெரிவித்தார். (இ-எ)

# கள் கொள்வனவு விலை புதிதாக நிர்ணயிக்கப்படும்

அச்சுவேலி, பெப். 5

கள்ளின் கொள்வனவு விலையை வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் புதிதாக நிர்ணயிக்கவிருக்கிறது.

கள் விற்பனை மெட்ரிக் அடிப்படைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து கொள்வனவு விலையும் மெட்ரிக் முறைக்கு மாற்றப்பட்டது

இதனால் பாதிக்கப்பட்ட கள்ளிறக்கும் தொழிலாளர்கள் களாக பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து சங்கப் பொதுமுகாமையாளர் திரு. என். இராஜேந்திரம் பகிஷ்கரிப்பு இடம்பெற்ற இடங்களுக்கு நேரில் விஜயம் செய்து பேச்சுக்களை நடத்தினார்

மெட்ரிக் முறையின் கீழ் கள் கொள்வனவு செய்யப்படும்போது கூடுதல் விலை வழங்க வேண்டும் என்று தொழிலாளர் [illegible]

இதைத் தொடர்ந்து தற்காலிக உடன்பாடு ஒன்று தொழிலாளருக்கும் சங்க நிர்வாகத்துக்கும் இடையே காணப்பட்டது.

கொள்வனவு விலையில் தற்காலிக மாற்றம் ஒன்றுக்கு இது உடன்பாடு வழிவகுத்தது

நிரந்தரமான கொள்வனவு விலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக சமாஜத்தின் பொதுச் சபையில் திட்டமிடப்படுகிறது விரைவில் [illegible]

**செய்திக்கொத்து**

### இலவச மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணம், பெப். 5

அண்மையில் லயன் ஏ. கே. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற கரைச்சி லயன் கழகக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட ஏழைகளுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் விநியோகிக்க ஒழுங்கு செய்யப்பட்டது

அவற்றைப் பெற விரும்புவோர் விண்ணப்பங்களைச் "செயலாளர், கரைச்சி லயன் கழகம், கிளிநொச்சி" என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-5)

### கிராமோதய சபைத் தலைவர்

முள்ளியவளை, பெப். 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மணவாளன்பட்ட முறிப்புக் கிராமசேவையாளர் பிரிவு கிராமோதய சபைக்கு திரு. க. உ. சோமசேகரம் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார் (எ-93)

**மக்கள் முகம்**

### புத்தூர் கலைமதி சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 5

புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தின் புத்தாண்டு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: கா. கதிர்காமநாதன் உபதலைவர்: சி கனகலிங்கம் செயலாளர்: ந. செல்வராசா உபசெயலாளர்: ம. இராசகுலசிங்கம் பொருளாளர்: எஸ் ஏ. சந்திரசேகரம் உபபொருளாளர்: மு மாணிக்கம்.

12 பேர் கொண்ட நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. (இ-எ)

### திரிசாரணர் குழுவின் கொடி வாரம்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ் மாவட்ட திரிசாரணர் (நல்லூர்) குழு யாழ் மாவட்டத்தில் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கொடி வாரத்தை நடத்தவிருக்கின்றது.

திரிசாரண அபிவிருத்தி, ஆதரவற்ற சிறுர்களின் கல்வி வளர்ச்சி, முதலுதவிப் பயிற்சி நெறி விஸ்தரிப்பு, சகல பாடசாலைகளிலும் சாரணர், பெண்கள் வழிகாட்டி போன்ற சமூக சேவை இயக்கங்களை ஆரம்பிப்பது ஆகிய திட்டங்களை செயற்படுத்தவே இந் நிதி பயன்படுத்தப்படும்.

கொடி வாரத்திற்குப் பொது மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று திரிசாரணர் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-எ)

### மீண்டும் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 5

மாகிகுளம் கிராமோதய சபைத் தலைவராக மாகிகுளம் மகா வித்தியாலய அதிபர் திரு ஆ. சண்முகரத்தினம் நான்காவது தடவையாக மீண்டும் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார். இவர் நான்கு முறையும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மாகிகுளம் மகா வித்தியாலய மண்டபத்தில் விசேடசேவை உத்தியோகத்தர் திரு கா. சோமநாதன் தலைமையில் கிராமோதய சபைத் தேர்தல் நடைபெற்றது. (இ)

### பேடன் பவல் தின போட்டிகள்

மானிப்பாய், பெப். 5

சாரணர்கள், சாரணிகள் சங்கம் இணைந்து பேடன் பவல் தினப் போட்டிகளை நடத்த முன்வந்துள்ளது.

குருளை சாரணர், சாரணர் பிரிவு சிரேஷ்ட சாரணர், திரிசாரணர் சாரண - சாரணிய தலைவர்கள், சிறு தோழர்கள் பிரிவு, வழிகாட்டிகள் பிரிவு சிரேஷ்ட வழிகாட்டிகள் பிரிவு போன்ற சாரண பிரிவுகளிடையே போட்டிகள் நடைபெறும். (இ-90)

### இடமாற்றம்

மண்டைதீவு, பெப். 5

யாழ் கல்விப் பணிப்பாளர் அலுவலக கட்டடப்பகுதியில் கடமையாற்றிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. குமாரசாமி கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டார். (இ-88)

### உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு கூட்டம்

ஆயுள்வேத ஓய்வூதியர்கள் மற்றும் உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் சம்பந்தமாக ஆராய்வதற்காக, எதிர்வரும் திங்கட்கிழமை (9-2-87) காலை பத்து மணிக்கு யாழ் மாநகர இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள கணேசானந்தா ஸ்ரோஸ் கட்டடத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

ஓய்வூதியர்கள் அனைவரையும் சமுகம் அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ச. கதிரமலைநாதன்,
ஆயுள்வேத வைத்தியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

கோபம் வந்தால் உடனே பத்து வரை எண்ணிய பின் பேசு.

— ஜெபர்ஸன்.

**உதயன்**

உண்மை - சிறப்பாண்மை - சுதந்திரம்

இல,15,2 ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 05-02-1987 த.பெ இல. 23

# நோயாளியும் போராளியா?

இலங்கையின் 39 ஆவது சுதந்திர தினத்துக்கு முதல்நாள் ஈழத் தமிழ் மண்ணில் அரசாங்கம் குண்டு வீச்சு நடத்தியது

சுதந்திர தின வைபவங்களின் வழமையாக அரசாங்கப் படைகளின் அணிவகுப்புகள் நடப்பதுண்டு. சமீப வருடங்களாக விமான சாகச காட்சிகளும் இடம்பெற்று வருகின்றன அந்தச் சாகசங்களைப் பார்ப்பதற்கென்றே பெருந்தொகையான மக்கள் கூடுவது உண்டு.

இம்முறை சுதந்திர தினக் கொண்டாட்ட வைபவங்கள் கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் நேற்று நடந்தன.

ஈழத் தமிழ் மக்கள் பல வருடங்களாகச் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரித்து வருகிறார்கள். துக்கதினம் அனுஷ்டித்து வருகிறார்கள். அவர்களுக்கு இம்முறை தமது விமானச் சாகசத்தை விபரீத முறையில் காட்ட வேண்டும் என அரசாங்கம் நினைத்திருக்க வேண்டும்.

மின்னுமல் முழங்காமல் வந்த மழைபோல, செவ்வாய்க்கிழமை மாலை மரணிப்பாய் கூவா வடியிலும், அச்செழுவிலும் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின.

போராளிகளின் ஆயுதத் தொழிற்சாலைகள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்த போதிலும், உயிர்ச்சேதமும் உடைமைச் சேதமும் பொதுமக்களுக்குத்தான்.

வயோதிபர் ஒருவர் மரணமானார், பெண்கள், சிறுவர்கள் உட்பட பத்துக்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். பல வீடுகள் எரிந்தும் உடைந்தும் சேதமடைந்தன. வான் பயிர்களும் சேதமுற்றன.

கிழக்கில் தாக்குதல் முடிந்து வடக்கு வருவதாக பாதுகாப்பு மந்திரி திரு. அத்துலத்முதலி அறிவித்திருந்தார். அரசாங்கப் பத்திரிகைகளும் அவ்வாறே கொட்டை கட்டிச் செய்திகள் வெளியிட்டன

அதனை ஊர்ஜிதம் செய்தாற்போல வடக்கு நோக்கிப் பெரும்படை வந்து கொண்டிருக்கிறது; பயணிகளைப் பணயம் வைத்து ஊர்கோலம் நடத்திக் கொண்டிருக்கிறது.

அதனை அண்டிக் குண்டு வீச்சும் நடப்பதால் "கிழக்கில் முடிந்தது வடக்கில் நடக்கும்" என்ற கதை உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்ற அச்சம் வடக்கு மக்கள் மனதில் எழுவதில் வியப்பில்லை.

அவர்கள் அஞ்சினாலும் சரி அஞ்சாவிட்டாலும் சரி அரசாங்கம் தனது அட்டூழியத்தை நிறுத்தும் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை; உத்தரவாதமும் இல்லை.

ஆகையால் ஆயுதப்படை அட்டகாசத்துக்கு அஞ்சிச் சாவதைவிட மலையே விழுந்தாலும் சிரசே சும என்ற மனத்துணிவுடன் தமிழ் மக்கள் இருக்கவேண்டும்.

சுதந்திரமும் உரிமைகளும் வேண்டுமாயின், அடக்குமுறையை உடைத்தெறிய வேண்டுமாயின் அந்தத் துணிவு அவசியம். அதனை ஈழத்தமிழர் யாவரும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் நோயாளி மீதும் ஷெல் அடிக்கும் அரசாங்கப் படைகள், யார் எதைச் சொல்லியும் தங்கள் அட்டூழியத்தை நிறுத்தப்போவதில்லை.

யாழ். ஆஸ்பத்திரி பலதடவைகள் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியது. அங்கு பணிபுரியும் டாக்டர்கள் முதற்கொண்டு ஏனைய ஊழியர்கள் வரை அதனைக் கடுமையாக ஆட்சேபித்தும், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை

தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்றவன் நிலையில் இருந்துகொண்டு அரசாங்கம் கற்பனைக் காரணங்களைக் கட்டவிழ்த்து தனது நடவடிக்கையை நியாயப்படுத்தியது. அந்தப் போக்கிரித்தனத்தை அது மாற்றிக்கொள்ளும் என்று எவரும் எதிர்பார்ப்பதற்கு இல்லை,

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்து துக்கோஷ்டி வந்துபார்த்து உண்மைநிலையைக் கூறியது. தென்னிலங்கை கிறிஸ்தவ மதகுருமார் கோஷ்டிவந்து பார்த்து உண்மை நிலையைச் சொன்னது ஆனால் அரசு தனது நியாயப்படுத்தல் தன்மையை மாற்றவில்லை

இம்முறை கோட்டை இராணுவம் ஏவிய ஷெல்கள் பல வார்ட்டுகளுக்கு மேல் விழுந்தன. அங்கு சிகிச்சை பெற்ற நோயாளிகள் காயமுற்றனர் அவர்களில் ஒருவர் மயக்க நிலையில் இருந்தவர். ஷெல் குண்டு தாக்கியதால் அவரது கையையே சழற்ற வேண்டி ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது

ஆஸ்பத்திரி நலன் கருதியாவது கோட்டை இராணுவ முகாமை நீக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. அந்தப் பக்கத்தை நோக்கித் தாக்குதல் நடத்தாமல் படைகளால் இருக்க முடியவில்லை.

இனிச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் கவனத்துக்கு எடுக்க வேண்டும், இவ்விஷயத்தில் தலையிட்டு நோயாளிகளைக் காப்பாற்ற வேண்டும். இல்லையேல் நோயாளிகளும் போராளிகளாகப் பட்டம் சூட்டப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## ஸ்பெயினில் மாணவர் ஆர்ப்பாட்டம்

மாட்ரிட், பெப் 4

உயர்கல்வித் துறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கோரி ஸ்பெயின் மாணவர் நாடாளுமன்றத்தின்முன் நடத்திய ஆர்ப்பாட்டம் வன்செயலில் முடிந்தது.

பொலீஸார் நடத்திய குண்டாந்தடிப் பிரயோகத்தில் 6 மாணவர் காயமடைந்தனர்.

மாணவர் நடத்திய தாக்குதலில் சுமார் 30 பொலீஸார் காயமடைந்தனர்.

17 மாணவர் கைது செய்யப்பட்டனர்.

## கடற்படை பலம் அதிகரிப்பு

பெய்ரூட், பெப்.4

மத்தியதரைக் கடலில் அமெரிக்க கடற்படைப் பலம் அதிகரிக்கப்பட்டு உள்ளது

ஈரான் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 4 பேராசிரியர்கள் கொல்லப்படவிருக்கின்றனர் என்ற பயமுறுத்தலைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்கவே கடற்படைப் பலம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. மத்தியதரைக் கடலில் 19,000 அமெரிக்கக்கடற்படை வீரர்கள் தற்சமயம் உள்ளனர். (இ-எ)

## ராஜீவிற்கு ஸியா செய்தி

இஸ்லாமாபாத், பெப்.4

இந்திய- பாகிஸ்தான் எல்லைகளில் தோன்றியுள்ள பதற்ற நிலையை தணிப்பதற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா செய்தி ஒன்றை பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்தார்

மலேஷிய பிரதமர் மகதீர் மகமுது மூலம் இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது. (ஒ)

# ஜனாதிபதி றேகன் ஓர் உளவாளியாம்!

வாஷிங்டன், பெப். 4

உளவாளி ஒருவர் ஜனாதிபதியானார்.

அவர் இன்றும் ஜனாதிபதியாக விளங்குகின்றார்

அமெரிக்க அதிபர் றொனால்ட் றேகன் தான் அந்த உளவாளி

அமெரிக்காவின் பிரதான உள்ளூர் உளவு ஸ்தாபனம் எப் பீ ஐ என்று அழைக்கப்படுகிறது.

இந்த ஸ்தாபனத்துக்கு உளவு பார்ப்பவராக திரு றேகன் பணியாற்றி வந்தார். அவருக்கு அப்போது வழங்கப்பட்ட இரகசிய இலக்கம் ரி-10.

1947 இல் றேகன் நடிப்புத் துறையில் ஈடுபட்டு இருந்தார்.

திரைப்பட நடிகர் சங்கத் தலைவராக றேகன் அப்போது இருந்தார்.

நடிகர்களின் நலன் களைக் கவனித்து வந்த அதே நேரத்தில், இடதுசாரிப் போக்குள்ள நடிகர்கள் பற்றிஎப்.பி.ஐ உளவு ஸ்தாபனத்துக்குத் தகவல் கொடுத்தும் வந்தார் என்று அமெரிக்க சஞ்சிகையான "நியூஸ்வீக்" தனது ஜனவரி 5 இதழில் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 'ஊத்தை' வேலையில் றேகன் தனது சகோதரர் நீலுடன் சேர்ந்து ஈடுபட்டிருந்தார்.

றேகன் ஜனாதிபதியாக வந்ததும், அமெரிக்கப் பிரஜைகளை உளவு பார்த்ததற்காகத் தண்டிக்கப்பட்ட இரண்டு உளவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கினார்.

அது மட்டும் அல்ல, வெள்ளை மாளிகையில் அவர்களுக்கு நல்ல உயர் பதவிகளையும் கொடுத்தார்.

அவர்களில் ஒருவர் தேசிய பாதுகாப்புச் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

ஈரானுக்கு ஆயுதம் விற்றது, அதன் வருமானத்தை நிக்கரகுவா கிளர்ச்சிக்காரர்களுக்கு அனுப்பியது — ஆகிய ஊழல் நடவடிக்கைகளில் இந்த தேசிய பாதுகாப்புச் சபைதான் இன்று மாட்டிக்கொண்டுள்ளது. (இ-எ)

# ராஜீவ் - ஜோதிபாசு டார்ஜீலிங் விஜயம்

## கூர்க்காலந்துப் போராட்டம் 2 மாதங்களுக்கு ஒத்திவைப்பு

புதுடில்லி, பெப். 4

கூர்க்காலந்து போராட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, எதிர்வரும் சனிக்கிழமை பிரதமர் ராஜீவ் காந்தி மீண்டும் டார்ஜீலிங் செல்ல இருக்கின்றார்.

பிரதமருடன் மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசுவும் டார்ஜீலிங் செல்வார்.

கூர்க்காலந்து விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் ஒரே கருத்தைத் தான் கொண்டு உள்ளன என்பதை உணர்த்தும் விதத்திலேயே இருவரின் டார்ஜீலிங் விஜயம் அமையப் போகிறது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்திய உள்துறை அமைச்சர் பூட்டா சிங்குடன் கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணித் தலைவர் சுபாஷ் கிஷிங் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து கூர்க்காலந்து போராட்டம் 2 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேச்சுக்கள் மூலம்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதால் தான் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாக திரு சுபாஷ் கிஷிங் கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணியின் இரண்டுகோரிக்கைகளும் வருமாறு;

1. டார்ஜீலிங் பகுதியில் வாழும் நேபாளி இன மக்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.

2. கூர்க்கா இன மக்கள் வாழும் பிரதேசத்தை மேற்கு வங்காளத்தில் இருந்து பிரித்து தனி மாநிலமாக்க வேண்டும்.

(இ-எ)

## சீனு கடும் கட்டுப்பாடு

பீகிங், பெப். 4

வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மீது சீனு பலத்த கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அண்மையில் அமெரிக்க பத்திரிகையாளர் ஒருவரை சீனு வெளியேற்றியது.

அதன்பின்னர் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் விஷயத்தில் கடும்போக்கை சீன அரசு கடைப்பிடித்து வருகிறது (இ-எ)

## வெளி உலகில்

### பஞ்சாப்பில் புதிய அரசியல் கட்சி அமைக்கக் கோரிக்கை

சண்டிகார், பெப். 4

புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கி சீக்கியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வருமாறு அகாலிதள் கட்சியின் இரண்டு பிரிவினருக்கும் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

பஞ்சாப் பொற்கோவிலின் பிரதமகுரு மேற்கண்ட வேண்டுகோளை முதலமைச்சர் பர்னுலா தலைமையிலான அகாலிதள் கட்சிக்கும் பாதல் தலைமையிலான பிரிவுக்கும் விடுத்திருக்கின்றார்.

"பஞ்சாப் மக்களின் ஒற்றுமையைக் கருத்திற்கொண்டே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது; முதலமைச்சர் பர்னுலாவை இலக்கு வைத்து அல்ல" இப்படி பிரதமகுரு தெரிவித்திருக்கின்றார், (இ-எ)

### ஈராக்கின் ராணுவ பலம் அதிகரிப்பு

வாஷிங்டன், பெப். 4

ஈராக்கின் இராணுவ பலம் அதிகரித்துள்ளது என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பஸ்ரா துறைமுகத்தின் அருகில் ஈராக்கின் படைகள் முன்னேறியுள்ளதாகவும்-

ஈரானுடனான யுத்தத்தில் இதுவரை ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்யக்கூடிய வகையில் தனது இராணுவ பலத்தை ஈராக் அதிகரித்துள்ளதாகவும் அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர் (இ-எ)

### அணு ஆயுத பரிசோதனையில் அதிவேகம்

வாஷிங்டன், பெப். 4

அணுஆயுதப் பரிசோதனைகளை இரண்டு மடங்கு வேகத்தில் நடத்த இருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர். (இ-எ)

# போராளிகளிடம் ஆயுதம் கைப்பற்றிய எம்.ஜி.ஆரின் செல்லப்பிள்ளை மோகன்தாஸ்

சில நாட்களுக்கு முன்பு பொலீஸ் டைரக்டர் ஜெனரல் மோகன்தாஸ் பத்திரிகையாளர்கள் கூட்டமொன்றை காலையில் திடீரென்று கூட்டினார். வெடிகுண்டு நிகழ்ச்சிகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் பொலீஸ் திறமையாகச் செயல்பட்டிருப்பதாக எடுத்துச் சொன்னார். "தமிழ்நாட்டில் உள்ள பிரதான எதிர்க்கட்சிதான் இதற்கெல்லாம் பின்னணியில் இருக்கிறது" என்று பெயர் குறிப்பிடாமல் தி. மு. க. வைக் குற்றம் சாட்டினார்.

கிட்டத்தட்ட அதே நேரத்தில் அவரை கட்டாயமாக விடுமுறையில் செல்ல உத்தரவு பிறப்பித்தார் முதலமைச்சர் எம். ஜி ஆர்.

இரண்டு மாதம் லீவில் செல்ல முதலமைச்சருக்கு விண்ணப்பம் அனுப்பியிருந்தார் அவர்! முதலமைச்சரோ அவரை உடனே விடுவித்து உத்தரவு பிறப்பித்தார்!

முதலமைச்சருக்கும் மோகன்தாஸுக்கும் இடையே மீண்டும் விரிசல் வெடித்தது!

### ஒரே பதவியில் பத்து ஆண்டு

தமிழக பொலீஸ் வரலாற்றில் சரித்திரம் படைத்தவர் மோகன்தாஸ். 1976 இல் தி. மு. க. ஊழல்களை விசாரிக்க சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்ட போது, அதற்கு உதவ நியமிக்கப்பட்ட பொலீஸ் குழுவில் இடம் பெற்று டில்லியிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தார்

அ. தி. மு. க. ஆட்சி ஏற்பட்டவுடன் சி. ஐ. டி. இலாகாவின் டி. ஐ. ஜி. யாக நியமிக்கப்பட்டார். நாற்காலியில் பதவி உயர்வுகளுடன் பத்து வருடம் இருந்தார் மோகன்தாஸ்.

பொலீஸ் அதிகாரிகள் மூன்று வருடம்தான் ஒரு பதவியில் இருக்க வேண்டும் என்ற அரசு விதி இருக்கிறது! அதனால் தானோ என்னவோ டி. ஐ. ஜி யாக இருந்தவர் அடிஷனல் ஐ. ஜி. யாக்கி, பிறகு ஐ. ஜி. யாக்கி — கடைசியில் டி. ஜி. பி. ஆக்கப்பட்டார்! இவருக்குப் பதவி உயர்வு தரவேண்டும் என்பதற்காகவே பல 'ஐ. ஜி.' பதவிகள் ஏற்படுத்தப் பட்டன என்று சொல்வார்கள்!

இந்த அளவுக்கு எம். ஜி. ஆருக்கும் மோகன்தாஸுக்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்பட்டிருந்தது!

இந்த பத்தாண்டு கால கட்டத்தில் சர்ச்சைக்கிடமான அதிகாரியாக இருந்தார் மோகன்தாஸ் அரசியலில் இருந்திருக்க வேண்டியவர் என்று சொல்லப்பட்டவர்!

"திறமை மிக்கவர் தான்... ஆனால், அரசியல்வாதியாகவே கடைசிவரை செயல்பட்டார்" என்று அ. தி. மு. க. அமைச்சர்களே வர்ணிப்பது உண்டு. பல ஐ. ஏ. எஸ், ஐ. பி. எஸ். அதிகாரிகளுக்குச் சிம்மசொப்பனமாக விளங்கினார்! அவர் சந்தேகப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகளின் டெலிபோன் மற்றும் நடவடிக்கைகள் ரகசியமாக வேவு பார்க்கப்பட்டன!

மோகன்தாஸ் பெயர் பிரபல்யமானது, தர்மபுரி நக்ஸலைட்டுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டபோதுதான் அப்போது தேவாரமும்— இவரும் டீம் ஸ்பிரிட்டுடன் முறியடித்தனர்!.

### மோதல்கள்

தலைமைச் செயலாளர்களாக திரவியம், கார்த்திகேயன், சொக்கலிங்கம் ஆகியோருடன் மோகன்தாஸ் மோதியிருக்கிறார். நெடுஞ்செழியன் போன்ற மூத்த அமைச்சர்களுக்கும் இவரைப் பிடிக்காது!

பொலீஸ் துறையில் மோகன்தாஸ் ஆதரவாளர்கள் — எதிர்ப்பாளர்கள் என்ற இரு கோஷ்டிகள் நிலவின! பொலீஸ் துறையில் தனக்குத் தெரியாமல்— தனது விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடக்காமல் பார்த்துக் கொண்டார் இவர்.

இவருக்கு மேல் டி. ஜி. பி பதவியில் இருப்பவர்கள் 'பொம்மை'யாகவே செயல்பட வேண்டியிருந்தது.

ஒரு டி. ஜி பி.க்கும் இவருக்குமிடையே 'யார் பெரியவர்?' என்ற சண்டையே நடந்திருக்கிறது. டி. ஜி. பி. தலைமை நிலையத்தில்— சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாகச் சொல்லப்படும் 'டெலிபிரிண்டர்' சண்டையைக் கேட்டால் சிரிப்பாக இருக்கும்.

இந்தத் தலைமையகத்தில் -டி ஜி. பி. அறையில் பி. டி. ஐ.; யு. என். ஐ. செய்தி ஸ்தாபனங்களின் இரண்டு டெலிபிரிண்டர்களும் இருந்தன. திடீரென்று ஒரு நாள் மாலை இவை இரண்டும் மோகன்தாஸ் அறையில் கொண்டுபோய் வைக்கப்பட்டுவிட்டன! அன்றைய டி. ஜி. பி. யாக இருந்தவருக்கு இதைப் பற்றிச் சொல்லப்படவே இல்லை! மறுநாள் அந்த டி. ஜி. பி. வந்து பார்த்தால் - தன் அறையில் இருந்த இரண்டு டெலிபிரிண்டர்களைக் காணோம். "எங்கே போயிற்று?" என்று அவர் விசாரித்த பிறகு உண்மை தெரிந்தது! கோபம் கொண்டார்! உடனே இரண்டு டெலிபிரிண்டர்களையும் தன் அறையில் திரும்பவும் வைக்க உத்தரவிட்டார்!

இந்த 'இழுபறி'ப் போராட்டத்தில் ஒரு டெலிபிரிண்டரை டி ஜி பி. அறையிலும், மற்றொரு டெலிபிரிண்டரை மோகன்தாஸ் அறையில் வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது! எந்த டெலிபிரிண்டர் யார் அறையில் வைப்பது? அதிகப்பணம் செலுத்தப்படும் பி டி ஐ. டெலிபிரிண்டர் மோகன்தான் அறைக்குப் போயிற்று! யு என். ஐ. —டி. ஜி. பி. அறைக்குப் போயிற்று!

ஆனால், மிகவிரைவில் மோகன்தாஸ் அறைக்கு ஒரு புது யு. என். ஐ. டெலிபிரிண்டரும் விசேஷ உத்தரவின்படி வைக்கப்பட்டது! ஆக வெற்றி இவருக்கே!

தி. மு. க. - இந்திரா காங்கிரஸ் உறவு முறிவதற்கும், இ. காங்கிரஸ் — அ. தி. மு. க. உறவு ஏற்படுவதற்கும் திரைமறைவில் வேலை செய்தவர் மோகன்தாஸ்.

எம் ஜி ஆர் உடல் நலக் குறைவு ஏற்பட்டவுடன் அ தி மு க. வில் மோகன்தாஸைப் பிடிக்காத அமைச்சர்களின் கைகள் ஓங்கின! இவர் பதவி மாற்றம் செய்யப்பட்டார்! உடனே லீவில் போனார் மோகன்தாஸ். எம் ஜி ஆர். திரும்பி வந்ததும் முதலில் சந்தித்த அதிகாரி இவரே! மீண்டும் பழைய பதவிக்கு திரும்பினார்.

'முன் கோபம் மிகுந்தவர்' என்று வர்ணிக்கப்படும் மோகன்தாஸுக்கும், முதலமைச்சருக்கும் யாரும் எதிர்பாராமல் சென்றஆண்டு கருத்து வேறுபாடு மூண்டது அந்தச் சமயத்தில் அலெக்ஸாண்டர் என்ற பொலீஸ் அதிகாரிக்குப் பதவி உயர்வு தரப்பட்டு, முன்னுக்குக் கொண்டு வரப்பட்டார். மோகன்தாஸ் ஜெயலலிதா ஆதரவாளர் என்றும், அலெக்ஸாண்டர் வீரப்பன் ஆதரவாளர் என்றும் சொல்லப்பட்டனர்! ஒரு காலத்தில் அலெக்ஸாண்டர், இவரது நண்பராக இருந்தவரே. மோகன்தாஸும் அலெக்ஸாண்டரும் புலனாய்வுத் துறையின் இரட்டையர்கள் என்று அழைக்கப்பட்ட காலம் இருந்தது. இவர்கள் எதிரும் புதிரும் ஆனார்கள். இந்தப் போட்டியில் கடைசியில் மோகன்தாஸ் மீண்டும் வென்றார். சில மந்திரிகளின் வீழ்ச்சியுடன் — அலெக்ஸாண்டர் வளர்ச்சியும் தற்காலிகமாக நின்றது!

### கடைசி மோதல்...

இந்தமுறை மோகன்தாஸ் தன் பலத்தையும் மீறிய சில காரியங்களைச் செய்துவிட்டார்! அவர் தனது சிங்கப்பூர் பயணத்திற்கு முன்கூட்டி அரசிடம் அனுமதி பெறவில்லை. முதலமைச்சரிடமும் மத்திய உள்துறை அமைச்சகத்திடமும் எழுத்து மூலம் தெரிவித்து எழுத்துமூலம் அனுமதிபெற்ற பிறகே இம்மாதிரி அரசு அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும் என்பது அரசு ஒழுங்குமுறை விதியாகும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொய்யாமொழி



**குறள்:**

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

**பொருள்:**

ஊழால் தமக்கு உரியவை அல்லாத பொருள்கள் வருந்திக் காப்பாற்றினாலும் நில்லாமல் போகும்; தமக்கு உரியவை கொண்டு போய்ச் சொரிந்தாலும் போகா.

## சமய சந்நிதிகளில்

### மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில்

காங்கேசன்துறை, பெப். 5

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த இலட்சார்ச்சனை ஆரம்பமானது.

எதிர்வரும் தைப் பூசத்தன்று தேர் விழாவுடன் இது பூர்த்தி அடையும்.

இதற்கான ஏற்பாடுகளை ஆலய ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ. சு. து. ஷண்முகநாதக் குருக்கள் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Bitsman Institutess
MANIPAY
A/L 87 Aug.
கலை, வர்த்தக, விஞ்ஞான
வினு - விடை
வகுப்புக்கள்
ஆரம்பம்: 07-02-87 சனி 2-00 p.m.

# உதயன்

05 - 02 - 1987 வியாழக்கிழமை

Bitsmans Institutes
MANIPAY
A/L 87 Aug. பிரிவு 1
கம்பனிக் கணக்கியல்
ஆசிரியர்:
திரு. இராஜன், B.Com. (Special)
ஆரம்பம்: 07-02-87 சனி 10:30 a.m.

ஆனையிறவு தடை முகாமில்

## தடுத்து வைக்கப்பட்ட பொருள்களைத் திரும்பப் பெறும் முயற்சி கைகூடவில்லை

யாழ்ப்பாணம்பெப். 5

ஆனையிறவு இராணுவ முகாமில்கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் தடுத்து வைக்கப்பட்ட யாழ் வர்த்தகர்களது பொருள்களை திருப்பிக் கொடுப்பதற்கு இராணுவ உயரதிகாரிகள் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்

சிப்பாய்களினால் தடுத்து வைக்கப்பட்ட பொருள்களை மீளப் பெற்று வருவதற்கென முகாம் சென்ற வர்த்தகர் குழுவிடம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாம்.

எம்மால் முகாமில் தடுத்து வைக்கப்பட்ட பொருள்களை அரச அதிகாரிகள் குழுவந்து பார்த்துச் சென்றுள்ளது

இதனால் பொருள்களை மீளத் தரமுடியாது எனவும் அவர்கள் தெரிவித்தனராம்.

முகாமில் தடுக்கப்பட்ட வாகன உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், சைக்கிள்கள், இரும்புக் கம்பிகள் என்பன தொடர்ந்தும் ரயில் பாதை ஓரமாகக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து குடா நாட்டுக்கு தேவையான பொருள்களை லொறிகளில் ஏற்றிவருவதற்கு லொறிஉரிமையாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர் (இ-10)

## மினிபஸ் சங்கத்துடன் யாழ் - கொழும்பு பஸ்களும் இணையும்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ் --- கொழும்பு, யாழ்-வவுனியா போக்கு வரத்துச்சேவைகளை நடத்தும் தனியார் பஸ்களை வடபிராந்திய மினிபஸ் போக்கு வரத்துச் சங்கத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுவருகிறது.

இந்த இணைப்பு மூலம் சகல பஸ்பிரயாணிகளுக்கும் போக்குவரத்துக்கான பஸ் கட்டணங்களை சீரமைக்க முடியும் என்று வடபிராந்திய மினிபஸ் போக்குவரத்து சங்கத் தலைவர் திரு பொன். மதிமுகராசா தெரிவித்தார்.

கொழும்பு-யாழ், வவுனியா-யாழ் சேவைகளை நடத்தும் பஸ்களுக்கு ஏற்படும் கட்டண மாற்றங்களால் பொதுமக்கள் பெரும் அவதிக்கு உள்ளாக வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே ஒரு சீரான கட்டணத்தை அறவிடவும் சங்கம் முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-10)

### தமிழ் ஈழ...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தினர் "தமிழ் ஈழ விடுதலை ராணுவம்" என்ற இயக்கத்தினை முன்னர் தடை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஏற்கனவே ரெலோ, புளொட், ஈ பி ஆர். எல். எவ் இயக்கங்களைத் தமிழ்ப்பகுதிகளில் தடை செய்து விட்டதாக அறிவித்திருந்தனர்.

இதேவேளை தமிழ் ஈழ ராணுவத்தின் தலைவர் தம்பாப்பிள்ளை மகேஸ்வரனும் தமிழீழப் பிராந்தியப் பொறுப்பாளர் நந்தனும் இந்தியாவில் தங்கி நிற்பதாக அறியப்படுகிறது; (அ-10)

### நள்ளிரவு..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தன

இத் திடீர் ஷெல் தாக்குதலை அடுத்து நகரில் மின்சாரமும் நள்ளிரவு நடைப்பட்டது.

போராளிகள் எதுவித தாக்குதலும் மேற்கொள்ளாத நிலையிலேயே படையினர் ஷெல் தாக்குதலை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### போராளிகளிடம்.....

(3ம்- பக்கத்தொடர்ச்சி)

மோகனதாஸ் அப்படி அனுமதி எதுவும் எழுத்துமூலம் கேட்டுப் பெறவில்லை. இதனால் மத்திய அரசின் அதிருப்திக்கும் சண்டனத்திற்கும் ஆளானார்.

ஆனால் இந்த விவகாரத்தில் மோகன்தாஸ் அபிப்பிராயம் வேறு. புலனாய்வுத்துறை அதிகாரிகள் பணி நிமித்தம் வெளிநாடு போனால் முதலமைச்சர் மத்திய உள்துறை செயலகத்திற்கு அதுபற்றி 'வாய்மூலம்' தெரிவித்தால் போதும் என்பது அவர் கருத்து. மத்திய I B, மற்றும் RAW அதிகாரிகள் இப்படித்தான் போகிறார்கள் என்பதை இவர் சுட்டிக் காட்டினார். ஆனால் இந்தக் கருத்தை மத்திய அரசு ஏற்கவில்லை.

சக்திவாய்ந்த 'இந்து' இதழுடன் மோகன்தாஸ் மோதியதும் இன்னொரு காரணம்.

ஈழப் போராளிகள் ஆயுதங்களைப் பறிமுதல் செய்தது - குறிப்பாகப் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் மீது இவர் நடவடிக்கை எடுத்தவிதம் குறித்து 'இந்து'வின் டில்லி நிருபர் ஜி கே. ரெட்டி கண்டனம் தெரிவித்துக் கட்டுரை எழுதினார். மத்திய அரசுக்குத் தெரியாமல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று ஜி. கே. ரெட்டி எழுதினார்.

உடனே மோகன்தாஸ் இதை மறுத்துப் பேட்டி கொடுத்தார்

அதற்கு மறுநாள் ஜி கே ரெட்டி தன்கருத்து சரிதான் என்று உறுதிப் படுத்தினார். ஆத்திரமடைந்த மோகன்தாஸ் 'நான் அரசியல் வாதி அல்ல... ...நிர்வாகத்தில் இருப்பவன் ... இதற்கு மேல் மறுக்கமுடியாது' என்று கூறினார்

அதோடு நிற்காமல் முதலமைச்சர் எம் ஜி. ஆரைச் சந்தித்து அவரை மறுப்பு அறிக்கை தருமாறு வற்புறுத்தினார். இந்த முறை முதலமைச்சர் மறுத்தார். இந்த விவகாரத்தைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடும்படி முதல்வர் கூறினார்.

இந்தக்கட்டத்தில் மத்திய அரசுக்கு மோகன்தாஸ் செய்கைமீது அதிருப்தி ஏற்பட்டுவிட்டது. மத்திய அரசு இவரை அந்தத் துறையில் இருந்து விடுவிக்குமாறு உத்தரவு அனுப்பியதாகச் சொல்லப்படுகிறது.

தான் சொன்னவாறு முதலமைச்சர் மறுப்பு அறிக்கை தராததால் வருந்திய மோகன்தாஸ் தான் விடுமுறையில் செல்வதாக மூன்று முறை முதல்வரிடம் கூறிப்பார்த்தார். ஜனவரி 23ஆம் திகதி அவர் மகள் திருமணம். அதற்காக இரண்டுமாதம் விடுமுறையில் செல்ல விரும்பி முதல்வருக்கு விண்ணப்பித்தார்.

மோகன்தாஸ் ஆத்திரத்தில் இந்த விடுமுறை விண்ணப்பம் அனுப்பியதாக நினைத்த எம். ஜி ஆர் அந்த விண்ணப்பத்தை அனுப்பிய அந்த நிமிடம்முதற்கொண்டே மோகன்தாஸ் லீவில் அனுப்பப்படுவதாக உத்தரவு போட்டுவிட்டார்.

ஜனவரி 1ஆம் தேதியிலிருந்து லீவ் போட்ட மோகன்தாஸ் அதற்கு முன்பே உடனடியாக ஜி பி. ரவீந்திரனிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டுச் செல்லுமாறு

## சிப்பாய்கள் அணிந்த குண்டு துளைக்க முடியாத சட்டை!

காங்கேசன்துறை, பெப் 5

கடந்த செவ்வாய் காலை காங்கேசன் துறைமுகத்தில் இருந்து பாரிய பெட்டிகள் பலாலி முகாம் கொண்டு செல்லப்பட்ட போது கடற்கரை வீதி ஓரங்களில் காவல் புரிந்த ஸ்ரீ லங்கா சிப்பாய்கள் குண்டு துளைக்காத சட்டைகள் அணிந்து இருந்தனர்.

வழக்கத்துக்கு மாறாக குண்டு துளைக்காத சட்டை அணிந்து சிப்பாய்கள் நின்றது, பெட்டிகளில் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் மிக முக்கியமானவை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது. (இ-ஈ-68)

## மக்கள் வங்கி ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப் 5

மக்கள் வங்கி ஊழியர் நடவடிக்கைக்குழு நாளை 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ் வின்ஸர் அரங்கில்கூட்டம்ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது

மக்கள் வங்கிக் கிளைகளுக்கு முன்பாக அடகு வைத்தோர் மறியல் போராட்டம் தொடர்வது பற்றியும் அதற்கான மாற்று நடவடிக்கை பற்றியும் இக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும். (-ஒ)

## அடகு வைத்தோர் மறியற்போர் தொடரும்

யாழ்ப்பாணம், பெப். 5

அடகு வைத்தோர் சங்கம் நடத்திவரும் மக்கள் வங்கிக் கிளைகளுக்கு முன்னலான மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாறு அடகு வைத்தோர் சங்கப் பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து இடமாற்றம் பெற்ற ஊழியர்கள் கடமை புரியும் இரண்டொரு மக்கள் வங்கிக் கிளைகள் கடந்த செவ்வாய்க்கிழமை சிறிது நேரம் இயங்கின.

எனினும் அது தற்காலிக ஏற்பாடுதான் எனவும் அதனால் அடகுவைத்தோர் மறியல் போராட்டம் தடைப்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இன்றும் வழமைபோல் சகல மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாகவும் மறியல் போராட்டம் நடக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கிட்டு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிடையாது.

கட்டுக்கோப்பான தலைமைத்துவம் இந்த இயக்கத்தில் இல்லை.

இப்படி திரு. கிட்டு கூறினார்.

தமிழ் ஈழ ராணுவத்தின் போராளிகள் பற்றி திரு. கிட்டுவிடம் வினவிய போது.

"தமிழ் ஈழ ராணுவத்தின் போராளிகள் எமது இயக்கப் போராளிகளுடன் களத்தில் ஒன்றிணைந்து போராடுவார்கள்

"எமது கட்டுப்பாடுகள் கட்டுக் கோப்புகள் அவர்களுக்கு புரிந்திருப்பதன் காரணமாக திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில்உள்ள தமிழ் ஈழ இராணுவப் போராளிகளை எம்முடன் இணைத்துள்ளோம்"

"யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் பற்றி நாம் இன்னமும் முடிவு செய்ய இல்லை" என்று கூறினார். (இ-10)

## கொட்டடி நமசிவாய வித்தியாலயம்:

# மனோகரா படமாளிகையில் தற்காலிகமாக நடத்த முயற்சி

யாழ்ப்பாணம், பெப் 5

கொட்டடிப் பகுதியில் உள்ள நமசிவாயம் வித்தியாலயத்தை தற்காலிகமாக மனோகரா படமாளிகையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கொட்டடிப் பகுதியில் அடுத்தடுத்து நடைபெறும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக கடந்த சில வாரங்களுக்கு மேலாக இப் பாடசாலை இயங்கவில்லை,

இதனால் மாணவர்கள் பழக்க வசதியின்றி அவதியுறுகிறார்கள்.

நாவாந்துறையில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு ஏற்கனவே நமசிவாயம் வித்தியாலத்தை மாற்றிக் கொடுத்தும் மாணவர்கள் அங்கு செல்ல மறுப்புத் தெரிவித்துவிட்டார்கள்.

பின்னர் வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கு இடம் மாற்றும்படி யாழ் கல்விப் பணிப்பாளரை பெற்றோர் ஆசிரியர் சங்கம் கேட்டிருந்தது.

அதற்கு பணிப்பாளர் கால அவகாசம் கொடுத்து இருந்தார்.

இதற்கிடையிலே தற்காலிகமாக மாணவர்களுக்கு மனோகரா படமாளிகையில் வைத்து பாடம் புகட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. (இ-10)

## பாகிஸ்தான் 9 விக்கெட்டுக்கு 487 ஓட்டங்கள்!

சென்னை, பெப். 5

இந்திய – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்டில் இரண்டாவது தினமானநேற்று பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன்னிங்ஸை 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 487 ஓட்டங்கள் எடுத்து முடித்துக் கொண்டது.

பாகிஸ்தான் அணியின் கப்டன் இம்ரசகான் 134 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸை நேற்று பிற்பகல் ஆடத் தொடங்கியது.

மாலை வரை இந்திய அணி விக்கெட் இழப்பு இன்றி 15 ஓட்டங்களை எடுத்தது. கவாஸ்கர் 10 ஓட்டங்களும் ஸ்ரீகாந்த் 5 ஓட்டங்களும் எடுத்து இருந்தனர்.

இது வரை இந்தியாவும் பாகிஸ்தானும் 36 டெஸ்ட் போட்டிகளில் மோதி உள்ளன.

இவற்றில் 6 இல் இந்திய அணி வென்றது 4 இல் பாகிஸ்தான் அணி வென்றது.

ஏனையவை வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தன. (இ-ஈ)

### ஆஸ்பத்திரியில் உணவுச்சாலை

காங்கேசன் துறை, பெப், 5

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை நோயாளர்கள் நியாயவிலையில் பொருள்களை வாங்கக் கூடிய வகையில் கூட்டுறவு உணவுச்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (இ-68)

## தமிழரின் உயிருக்கும் உடைமைகளுக்கும் உத்தரவாதம் வேண்டும்

ஜனாதிபதிக்கு அன்னையர் முன்னணி கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 5

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

சகல மக்களிடையேயும் நீதியும் சமாதானமும் நிலவுவதற்கான வழிவகைகளையும் ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும்.

யாழ் அன்னையர் முன்னணி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் ஆயுதப் படையினரால் மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆயுதப் படையினரும், அதிரடிப் படையினரும், ஊர்காவல் படையினரும் தமது தேடுதல் நடவடிக்கையின்போது பொது மக்களைக் கைது செய்கின்றனர். பெண்களையும் குழந்தைகளையும் சுட்டுக்கொல்கின்றனர்.

இவ்வாறு கடிதத்தில் மேலும் எழுதப்பட்டுள்ளது. (இ-10)

### அம்பாறை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோகம் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தில் 9பேர் இறந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

மாந்தோட்டம் என்னும் இடத்தில் நடந்த இன்னொரு சம்பவத்தில் சிங்கள ஊர்காவல் படையினர் போராளிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று பி. பி. சி. வானொலி அறிவித்தது.

பல ஊர்காவல் படையினர் இச் சம்பவத்தில் உயிரிழந்திருக்கலாம் என்றும் பி. பி. சி. மேலும் தெரிவித்தது.

இதனிடையில் இரண்டு தாக்குதல்களிலும் 13 பேர் உயிரிழந்தனர்என்று யு. என். ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

தாக்குதல்கள் நடந்த இடங்களுக்கு கூடுதல் இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது (அ-எ)

அமெரிக்க தமிழ்ச் சங்கத் தலைவர்

## பஞ்சாட்சரம் உளவாளி என்கிறார் புலிகள் பிரமுகர்

யாழ்ப்பாணம், பெப். 5

தமிழீழப் போரில் ஈடுபட்டுள்ள சகல இயக்கங்களையும் புலிகளின் தலைமையின்கீழ் இணைப்பதற்கு அமெரிக்காவில் இயங்கும் தமிழ்ச் சங்கம் எடுக்கும் நடவடிக்கை வெறும் போலி நடவடிக்கை ஆகும்.

இதன் தலைவர் திரு. பஞ்சாட்சரம் ஓர் உளவாளி என்றே நாம் கருதுவோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

அமெரிக்காவில் இருந்து கொண்டு தமிழ்ப் போராளிகளின் நிலைமைகளை அவர்கள் புரிந்து கொள்ள முடியாது என்றும் புலிகள் பிரமுகர் கூறினார்.

திரு. பஞ்சாட்சரம் தலைமையில் அமெரிக்காவில் இயங்கும் தமிழ்ச் சங்கம் விடுதலைப் புலிகளின் தலைமையில் சகல இயக்கங்களையும் இணைக்க நடவடிக்கை எடுத்துவருவதாக செய்தி வெளியாகி இருந்தது.

இதுபற்றி எமது செய்தியாளர் கேட்டபோதே புலிகளின் பிரமுகர் மேற்கண்டவாறு பதில் அளித்தார். (இ-10)

## பெரிய தபாற் கந்தோர் பிரதான வீதிக்கு இடம் மாறுகிறது

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் தற்பொழுது இயங்கி வரும் யாழ் பெரிய தபாற்கந்தோர் அடுத்த வாரம் அளவில் பிரதான வீதியில் உள்ள மடத்தடிப் பகுதிக்கு இடம் மாற்றப்படலாம் எனத் தெரியவருகிறது.

கோட்டை முகாமைச் சுற்றியுள்ள புலிகளின் பாதுகாப்பு அரண்களுக்கு அருகில் இருக்கும் கட்டடங்களில் வசிப்பவர்களை வேறிடங்களுக்குச் செல்லுமாறு இராணுவ அதிகாரிகள் கடித மூலம் எச்சரிக்கை விடுத்ததை அடுத்தே இந்த இடம் மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மடத்தடியில் முன்னர் "மாக்கெட்" இயங்கிய கட்டடத்துக்கே இத்தபாலகம் மாற்றப்பட உள்ளது என்று தெரிகிறது.

### அன்னையர்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வீதி மறியல் செய்தனர்.

இதன் காரணமாக இரண்டு மணி நேரமாக இப் பகுதியூடாக எந்த வாகனமும் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

அங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த பல பிரமுகர்களும் உரையாற்றினர்.

ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட மகஜர் ஒன்றும் அங்கு வாசிக்கப்பட்டது.

### அரச அதிபர்- -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் தெரிவித்தன.

இந்த ஷெல் அடி காரணமாக மகப்பேற்று சிகிச்சைப் பிரிவு, ஆண்கள் கண் வார்ட், முறிவு நெரிவு வார்ட், 19ஆம் வார்ட் ஆகியன சேதம் அடைந்துள்ளன.

வார்ட்டுகளுக்கு ஏற்பட்ட சேதம் சுமார் ஒரு லட்சம் ரூபா வரை இருக்கும் என உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசிரியர் முற்பணம் தனித்தனி காசோலையாக சம்பளத்துடன் இல்லை

அச்சுவேலி, பெப். 5

இந்த வருடம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவிருக்கும் விசேட முற்பணம் 500 ரூபா, விழா முற்பணம் 500 ரூபா ஆகியவற்றை தனித்தனி காசோலையாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இந்த கொடுப்பனவுகள் அந்தந்த மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப் பட்டு வந்தன.

ஆனால், இந்த வருடம் தனித்தனி காசோலையாக வழங்குமாறு கல்வி அமைச்சு கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

விசேஷ முற்பணம் பெப்ரவரி மாதம் முடிவதற்கு முன்னரும் விழா முற்பணம் மார்ச் மாதம் முடிவதற்கு முன்னரும் காசோலை மூலம் பாடசாலை அதிபர்களுக்கூடாக வழங்குவதற்கான ஒழுங்குகளை யாழ் மாவட்ட கல்வித் திணைக்களம் செய்துவருகின்றது. (இ-11)

### யாழ்..:

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டைப் பகுதியில் மின்தடை ஏற்பட்டது.

தொலைபேசித் தொடர்பு இல்லாத காரணத்தினால் உடனே மின்வலுவகத்துக்குத் தகவல் கிடைக்கவில்லை.

பிந்தித் தகவல் கிடைத்ததும் ... மின்தடையை நீக்க நடவடிக்கை எடுத்தார்.

## துன்னாலையில் கத்திக்குத்து ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,பெப்.5

இருவருக்கு இடையில் ஏற்பட்டவாய்த் தகராறு கத்திக்குத்தில்முடிந்தது ஒருவர் மரணமானார்.

துன்னாலை தெற்கில் இச் சம்பவம் நடந்தது.

க சிவசிதம்பரப்பிள்ளை வயது 88 என்பவரே மரணமானவர் ஆவார்.

கொலை செய்தவர் எனச் சந்தேகிக்கப் படுபவரைப் போராளிகள் குழு ஒன்று விசாரணை செய்து வருகிறது.

யாழ் பதில் நீதவான் ... மரண விசாரணை நடத்தி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

## B.A.–87 வகுப்புகள்

கூடிய நேரம் எடுத்து முழுப் பாடத் திட்டமும் முடிக்கப்படும். 1 - 2 - 87இல் ஆரம்பமாகிவிட்டன.

G.A.Q. 88 வகுப்புகள் நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| பொருளியல் | — குமாரவேல் |
| இந்து நாகரிகம் | — அருள்நங்கை |
| தமிழ் | — குழந்தை |
| மெய்யியல் | — வேல் சிவானந்தன் |
| புவியியல் | — குணராஜா |
| அரசியல் | — குமார் |

விபரங்களுக்கு: கிளை:

அருள்நங்கை நிர்வாகி

உயர் கலைக் கல்லூரி — கெயின்ஸ் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். — நெல்லியடி, கரவெட்டி. 6-2-87இல் ஆரம்பம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 05 – 02 – 1987 தொலைபேசி இல. 24805, 23078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15 Second Lane, Power House Road, JAFFNA Registered as a News-paper at the General Post Office. Sri Lanka Under Number QJ. 60 N 86. Telephone, 24805,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org